1975 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரேமாதிரியான வேலைகளைச் செய்வதில்லை. உற்பத்தி, அனுப்புதல், விநியோகம் (Production, transmission and distribution) ஆகிய இந்த மூன்று பணிகளையும் மின்சார வாரியத்தில் இருக்கிறவர்கள் செய்கிறார்கள். இவ்வேலைகள் நகரசபையில் வேலை செய்கிறவர்களுக்கு இல்லை என்று—நாம் அல்ல—ஹைக்கோர்ட்டே தீர்ப்பு அளித்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது வேறுபல துறைகளில் ஒரே மாதிரியான பணிகளைச் செய்கின்றவர்கள் எங்கு பணியாற்றினாலும் ஒரேமாதிரியான சம்பளம், இதர சலுகைகளைப்பெற வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் மின்சார வாரியத்தில் பணிபுரிகின்றவர்களைப்போலவே இந்த நகரசபைகளில் பணிபுரிகின்றவர்களும் செய்கிற காரணத்தினால் ஒரேமாதிரியான சம்பள, சலுகைகளை அளிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கம் வேறு. நகராட்சி மன்றங்கள் வேறு. சம்பள விகிதத்தில் இவர்களுக்குள் எந்தவிதமான மாற்றமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் மின்சார வாரியத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல இங்கே உள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டாம் என்று அவர்கள் தீர்மானம் போட்டும் கூட. இதே சம்பள விகிதம் தான் அங்கே உள்ளவர்களுக்கும் தரப்படுகிறது.

ஆனால் அவர்கள் அங்குள்ள நிலை ஆணைகள், ஓய்வு பெறுகின்ற வயது—அங்குள்ளவர்களுக்கு 58 ஆக இருப்பதுபோல தங்களுக்கும் வேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்டின் கீழ் வருகிறார்கள். ஆகவே, இந்த இரண்டையும் அரசு நிராகரித்துவிட்டது. கிராஜுவிட்டி, ஓய்வூதியம் பற்றி கேட்கப்பட்டுள்ளது பற்றி அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. முனு ஆதி : நகராட்சியில் பணியாற்றி வந்தால் என்ன, மின்சார வாரியத்தில் பணியாற்றி வந்தால் என்ன ? இங்குள்ளவர்கள் கம்பம் ஏறுவதைப்போலத்தான் அங்குள்ளவர்களும் கம்பம் ஏறுகிறார்கள். அவர்களுக்கும் ஷாக் அடிக்கிறது. ஆகவே இரண்டு இடத்திலும் உள்ளவர்களுக்கு ஒரேமாதிரியான சம்பள, இதர சலுகைகளை அளிக்க அரசு முன்வருமா ?